மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரு தரப்பிலும் செல்வாக்கை உபயோகித்து, நல்ல முடிவு ஏற்படவேண்டும் என்று தான் நம்முடைய அரசு எல்லா விவரங்களையும் கொடுத்திருக்கிறோம். கேரள எல்லையில் நடக்கவேண்டியதாக இருப்பதால், நல்ல முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

* 406. வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்திற்காக அணைகள் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இத்திட்டம் குறித்து பணிகளைத் தொடங்குவதற்குக் கேரள அரசின் முடிவான இசைவு தேவைப்படுகிறது. அது கிடைத்துவிடுமென எதிர்பார்க்கிறோம். அணைக்கட்டு வேலையைக் கேரள அரசு நிறைவேற்றவேண்டும். எனவே இந்தத் திட்டம் விரைவாகத் தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்ச ரவர்கள் விரைவாக வேலை தொடங்கப்படும் என்று சொன்னார்கள். இந்தச் சிறுவாணி அணை எவ்வளவு லட்சம் மக்களுக்கு உபயோக மாகும், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், அடிக்கடி கோடை காலங் களில் பற்றுக்குறை இருக்கிறதே, அதைப் போக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா? இவற்றைப்பற்றி அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவை நகரத்திற்கு இருக்கும் தண்ணீர் பிரச்சினையை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி அதிகாரிகளைக் கலந்து பேசிவருகிறோம். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க, "ஸம்மர் ஸ்டோரேஜ்" கட்டுவது பற்றி மார்ச் திங்களில் ஆராயப்பட்டு, ஒரு மாதத்தில் இறுதி அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் பணித்தார்களே, அந்த இறுதி அறிக்கை இன்னும் வரவில்லையா? தாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். இன்னும் அதிகாரிகளிடமிருந்து விளக்கங்கள் தேவையாக இருப்பதால் இன்னும் அறிக்கை வரவில்லை. தண்ணீர் கஷ்டத்தைப் போக்க சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் கேரள அரசாங்கத்திற்கு தமிழக வாய்க் கால்கள்மூலம் தண்ணீர் இல்லாவிட்டாலும், கேரள மாநிலத்திற்கு அம்பலப்புழா ஆற்றில் 12 அடித் தண்ணீர் விடப்படுகிறது. அதனால்

1971 ஜூலை 23]

இந்தப் பகுதி வாய்க்கால்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான ஒப்பந்தம் கேரள அரசாங்கத்தோடு செய்து கொள்ளப் பட்டது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கு தொடர்பில்லை. அடுத்த கேள்வி வரும்போது, இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் அளிக்கிறேன்.

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம்

* 407. வினா:—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் தமிழகம் தண்ணீர் பெறுவதில் கேரள அரசு காலம் கடத்திக்கொண்டு போவதால் "நதி நீர் தகராறுகளை தீர்க்க" நீதிபதிகள் கொண்ட போர்டு நியமிக்க வேண்டும் என 1970–71-ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ் நதி நீர் பங்கீடு குறித்த சிக்கலான பிரச்சனைகள் எல்லாவற்றையும் இரு மாநில அரசுகளும் பேச்சு வார்த்தைகள்மூலம் சமாதானமாக முடிவு செய்து 29—5—1970-ல் ஒப்பந்தம் ஒன்று கையொப்பம் இட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் போக, நீராற்றில் அணைக் கட்டு வேலை காரணமாக எவ்வளவு ஏக்கருக்கு பயன்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீராறு அணைக் கட்டு வேலை ஒன்றரைக் கோடி செலவில் துரிதமாக நடைபெறுகிறது. அது ஒரு ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக் குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ் உள்ள வாய்க்கால் காங்கயம் பகுதியில் பாயும்போது, பல நேரங்களில் "டெயில்-எண்ட்"க்கு தண்ணீர் வருவதில்லை. நீராறு திட்டம் நிறைவுபெற்றால், அங்கே ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடும் வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் எல்லா அணைக்கட்டுகளும் முடிந்தால், 2,40,000 ஏக்கருக்கு ஆண்டுதோறும் தண்ணீர் கிடைக்கும்.

* 408. வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட வேலைகள் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுவதை கைவிட்டு அரசே ஏற்று நடத்த உத்தேச முண்டா?